

## அகண்ட தமிழ் உலகம்

# திருக்குறள் மாநாடு

## மட்டக்களப்பு, இலங்கை – 2026

உலகளாவிய அறப்பாதைக்கு வள்ளுவம் காட்டும் வாழ்வியல்

## அறநெறி ஆசிரியர்களுக்கான அறிவு மதிப்பீடு

**அகண்ட தமிழ் உலகம் எனும் அமைப்பானது, உலகம் முழுவதும் வாழும் தமிழர்களை ஒரே பண்பாட்டுத்தளத்தில் இணைக்கும் நோக்குடன், உலகளாவிய ரீதியில் 47க்கு மேற்பட்ட நாடுகளில் பல்வேறு சேவைகளை ஆற்றி வருகின்றது. இது தமிழர் பண்பாட்டையும் விழுமியத்தினையும் பாதுகாத்து வளர்ப்பதோடு, உலகில் வாழும் தமிழரிடையே ஒற்றுமையினையும் ஒத்துழைப்பினையும் முன்னேற்றத்தினையும் வலுப்படுத்தி முன்கொண்டுசெல்வதில் முனைப்புடன் செயற்பட்டுவருகின்றது.**

**அறத்தினை முதன்மையாகக்கொண்ட, தெய்வப்புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறள், உலகம் தழுவிய நிலையில் இந்திய மொழிகளில் மட்டுமல்லாமல், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், சீனம், ரஷியன் முதலிய 60க்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அதன்பொருண்மை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லப்படுகின்றது. இத்தகைய பெருமைபெறும் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறளினைப் போற்றும் திருக்குறள் மாநாடு, இலங்கையில் மட்டக்களப்பு மண்ணிலே சிறப்பாக இடம்பெற உள்ளதோடு, தமிழர்சமூகம் மேன்மைபெறத் திருக்குறள் தொடர்பாக, அறநெறி ஆசிரியர்களுக்கான அறிவு மதிப்பீடும் நடைபெற உள்ளது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, இப்போட்டியில் பங்குகொண்டு, எமது வாழ்வியல் நெறியினையும் வளமூட்டும் வள்ளுவத்தின் பொருண்மையினையும் உணர்ந்து செயற்படுவோம்.**

### நோக்கம்

- திருக்குறள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலம் பண்பாடான சமுதாயத்தினை உருவாக்குவதற்கு வழிகோலுதல்.
- திருக்குறள் தொடர்பான அறிவை மதிப்பீடு செய்தல்.

### மதிப்பீட்டு முறை

**எழுத்து மூலமான பரீட்சை**

**நேரம் : 01 மணித்தியாலம்**

## குறிப்புக்கள்

- அறநெறி ஆசிரியர்களாக இருத்தல் வேண்டும்.
- பின்வரும் தரவுபடிவத்தின் மூலம் (Google Form) சுயமாக பதிவினை மேற்கொள்ள வேண்டும். https://forms.gle/HLCqBWVks3Uonvfg7
- பதிவு செய்ய வேண்டிய இறுதித்திகதி: 24.05.2026.

## பொருளடக்கம் (Syllabus)

- திருக்குறளில் சமய வழிபாடு
- திருக்குறளில் அறநெறி வாழ்வு
- இந்து சமய கிரந்தங்களிலிருந்து திருக்குறளில் ஒத்துப்போகும் கருத்துக்கள்.

## பரீட்சைக்கான ஒழுங்கமைப்பு

- **பரீட்சை நிலையம் - வாழைச்சேனைக்குரிய பிரதேச செயலகப் பிரிவுகள்**
  - கோறளைப்பற்று
  - கோறளைப்பற்று வடக்கு
  - கோறளைப்பற்று தெற்கு
- **பரீட்சை நிலையம் - மட்டக்களப்புக்குரிய பிரதேச செயலகப் பிரிவுகள்**
  - ஏறாவூர்ப் பற்று
  - மண்முனை வடக்கு
  - மண்முனை தெற்கு
- **பரீட்சை நிலையம் - ஆரையம்பதிக்குரிய பிரதேச செயலகப் பிரிவுகள்**
  - பட்டிப்பளை
  - ஆரையம்பதி
- **பரீட்சை நிலையம் - களுவாஞ்சிக்குடிக்குரிய பிரதேச செயலகப் பிரிவுகள்**
  - மண்முனை தென் எருவில்பற்று
  - போரதீவுப்பற்று

மேற்காட்டப்பட்ட நான்கு நிலையங்களிலும் தனித்தனியே பரீட்சை நடைபெறும். மேலும் இதுபற்றிய மேலதிக விபரங்கள் பதிவுசெய்த ஆசிரியர்களுக்கு புலனக்குழு (WhatsApp Group) மூலம் அறிவிக்கப்படும்.


**மாநாட்டுத் தலைவர்**
பேராசிரியர் வ. கனகசிங்கம்

**மாநாட்டுச் செயலாளர்**
கலாநிதி மு. தயாநிதி

**திட்ட ஒருங்கிணைப்பாளர்**
பேராசிரியர் ந. இராஜேஸ்வரன்

**தொடர்புகள்**
அகண்ட தமிழ் உலகம்
இல 33, சரவணா வீதி,
கல்லடி, மட்டக்களப்பு

+94 70 6080 207
akthuthiru@gmail.com
திருக்குறள் மாநாடு
www.akthuthiru.lk